00982

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025**

**இறுதிப் பரீட்சை - 2025**

**மட்டம் - 08**

**STP8302/STP8502/ESP2202 – கல்வியின் அடிப்படைகள்**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

**திகதி:- 27.04.2025** **நேரம்: மு.ப 09.30 - பி.ப 12.30**

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. கல்வி தத்துவ அறிவு ஓர் ஆசிரியருக்கு ஏன் அவசியம் என்பதற்கான **மூன்று (03)** காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக.

2. ஜோன் டுயினால் அறிமுகப்படுத்தப்பட்ட கலைத்திட்டமொன்றினை தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய **நான்கு (02)** காரணிகளைக் குறிப்பிட்ட அவற்றில் **இரண்டினைச் (02)** சுருக்கமாக விளக்குக.

3. மனப்பாங்கு என்ற எண்ணக்கருவினால் கருதப்படுவது யாது என்பதனை வரைவிலக்கணப்படுத்தி மனப்பாங்கின் **நான்கு (04)** தொழிற்பாடுகளை பெயரிடுக.

4. இலங்கையின் பொது கல்வி முறைமையில் தரமான கல்வியினை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய **நான்கு (04)** படிகளைக் குறிப்பிடுக.

5. பொருத்தமான உதாரணமொன்றினை குறிப்பிடுவதன் மூலம் மீள் சமூகமயமாக்கல் என்ற பதத்தினைச் சுருக்கமாக விளக்குக.

6. தலைமுறைக்கிடையிலான பெயர்ச்சி மற்றும் தலைமுறைக்குள்ளேயான பெயர்ச்சி என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினைச் சுருக்கமாக விளக்குக.

7. முறைசாரா கல்வி ஏன் எங்களுக்கு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதற்கான **ஐந்து (05)** காரணிகளைக் குறிப்பிடுக.

8. இலங்கையின் கல்வி முறைமை எதிர்நோக்கும் **ஐந்து (05)** பிரதான பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**



19

## பகுதி – II

9. "கல்வி என்பது ஒரு இயற்கை செயன்முறை என்பதனால் கல்விச் செயன்முறைக்கு உதவுவதற்கு ஆசிரியரின் செயற்பாடு இன்றியமையாதாகும்."

அ. மாரியா மொண்டொசூரியின் கல்வி தத்துவத்தில் காணப்படக்கூடிய **நான்கு (04)** அடிப்படை கொள்கைகளை பெயரிடுக.

**(04 புள்ளிகள்)**

ஆ. மாரியா மொண்டசூரியின் கல்வி முறைமையின் **நான்கு (04)** சிறப்பு அம்சங்களைக் குறிப்பிட்டு, கற்றல் கற்பித்தல் செயன்முறையில் அவற்றில் ஒன்றின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

**(08 புள்ளிகள்)**

இ. மாரியா மொண்டசூரியின் சிந்தனை இலங்கை வகுப்பறை சூழலில் ஆசிரியரிலும், கற்பித்தலிலும் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனை விமர்சன ரீதியாக ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

10. அ. "இறுதி (முனைய) விழுமியங்கள்" மற்றும் "கருவிகள் விழுமியங்கள்" போன்ற எண்ணக்கருக்களைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ஆ. இலங்கை மாணவர்களிடையே கட்டாயம் விருத்தி செய்யப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற **நான்கு (04)** விழுமியங்களை பெயரிட்டு, அதற்கான காரணங்களையும் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

இ. பிள்ளைகளின் விழுமியங்களை விருத்தி செய்யும் போது ஆசிரியர்கள் எதிர் நோக்கும் சவால்களைக் குறிப்பிட்டு, **நான்கு (04)** உதாரணங்களைக் குறிப்பிடுவதன் மூலம் இதனைக் கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

11. கட்டிளமையினரின் சமூகமயமாக்கல் செயன்முறையில் சகபாடி குழுக்களின் செல்வாக்கு மிக முக்கியமானதாகும்.

அ. சமூகமயமாக்கல் செயன்முறையில் சகபாடி குழுக்கள் என்பதனால் கருதப்படுவது யாது என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ஆ. கூட்டுறவு கற்றலினூடாக சமூக திறன்களை விருத்தி செய்வதில் சகபாடி குழுக்களின் ஆதரவு ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதற்கான **நான்கு (04)** காரணிகளைக் குறிப்பிடுவதன் மூலம் கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

இ. பிள்ளைகளின் சமூகமயமாக்கல் செயன்முறையில் சமூக ஊடகங்கள் ஏற்படுத்தியுள்ள **இரண்டு (02)** நேர்மறை மற்றும் **இரண்டு (02)** எதிர்மறை தாக்கங்களை பரீட்சிக்குக.

**(08 புள்ளிகள்)**

12. "கற்றற் கற்பித்தல் செயன்முறையின் பொது மாணவர்கள் எந்த சமூக வகுப்புக்கு உரித்தானவர்கள் என்பதனை ஓர் ஆசிரியர் தெரிந்திருக்க வேண்டும்."

அ. "சமூக வகுப்பு" என்ற எண்ணக்கருவிற்கான உங்களது சொந்த வரைவிலக்கணத்தை தருக.

**(05 புள்ளிகள்)**

ஆ. இலங்கையில் காணப்படக்கூடிய **மூன்று** (03) சமூக வகுப்புக்களைக் குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றின் முக்கிய பண்புகளை விளக்குக.

**(07 புள்ளிகள்)**

இ. சமூக வகுப்புடன் தொடர்புபட்ட வகையில் மாணவர்கள் எதிர்நோக்கும் கல்வி சார் பிரச்சினைகள் **மூன்றினைக்** (03) குறிப்பிட்டு, ஆசிரியர் என்ற வகையில் அவற்றில் ஒன்றினை தீர்ப்பதற்கு எடுக்கப்பட முடியுமான நடவடிக்கைகளை கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

13. "கல்வி என்பது மனிதர்களுக்கான முக்கியத்துவம் பெறும் செய்முறையாகும் மற்றும் தனிநபர்கள் பல்வேறுபட்ட வழிமுறைகள் மூலம் கல்வியை பெற்று கொள்கின்றனர்"

அ. முறைசார் கல்வியானது முறைசாரா கல்வியிலிருந்து வேறுபடுகின்ற **நான்கு** (04) காரணிகளை முன்வைக்குக.

**(04 புள்ளிகள்)**

ஆ. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் முறைசாரா கல்வியின் பொறுப்புக்கள் யாவை? **நான்கு** (04) காரணிகளைத் தருக.

**(08 புள்ளிகள்)**

இ. இலங்கையில் முறைசாரா கல்வியுடன் தொடர்புபட்ட வகையில் **நான்கு** (04) பிரச்சினைகளை இனங்கண்டு, அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொருத்தமான தீர்வுகளை முன்மொழிக.

**(08 புள்ளிகள்)**

14. "பிறந்ததிலிருந்து இறக்கும்வரை கல்வியினைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்பது கல்வியியலாளர்களின் கருத்தாகும்."

அ. கற்றல் மைய சமூகம் என்பதனால் கருதப்படுவது யாது?

**(04 புள்ளிகள்)**

ஆ. வாழ்க்கை நீடித்த கல்வியின் முக்கிய பண்புகள் **நான்கினைக்** (04) கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

இ. வாழ்க்கை நீடித்த கல்வியின் மூலம் கிடைக்கப் பெறக்கூடிய **மூன்று** (03) பயன்களைக் குறிப்பிட்டு, ஒரு தனியாள் வாழ்க்கைக்கு அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

**(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -



21